# முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்த்து!



“நமக்கு நாமே பயணத்தைப் பற்றிய செய்திகள் தமிழக மக்க ளிடம் பரவி ஆளுங்கட்சியினரிடையே பீதியை ஏற்படுத்தத் தொடங்கியது. அதே நேரத்தில் உயர்ந்த இடத்திலே இருப்பவர்களும், அரசிலே உள்ள மூத்த அதிகாரிகளும் “நமக்கு நாமே” பற்றிய செய்திகளைப் பரிமாறிக் கொள்ள ஆரம்பித்தார்கள். பயணத்தின் ஒவ்வொரு நாள் காலையிலும் ஸ்டாலின் என்னைத் தொலை பேசியிலே தொடர்பு கொண்டு, முதல் நாள் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளையெல்லாம் எடுத்துச் சொல்லும் போது, ஒரு புறம் மகிழ்ச்சியாக இருந்தாலும், அவனது மெலிந்த உடல் இதையெல்லாம் தாங்கிக் கொள்ளுமா என்று எனக்கு நானே எண்ணிக் கவலைப்பட்டாலும், அதை வெளியே காட்டிக் கொண்டதில்லை.

**தம்பி ஸ்டாலின் தமிழகம் முழுதும் 234 தொகுதிகளிலும் மேற்கொண்ட “நமக்கு நாமே” விடியல் மீட்புப் பயணம் நமது கழக உடன்பிறப்புகளுக்கிடையே எழுச்சியையும், மக்களிடையே நம்பிக்கை கலந்த விழிப்புணர்ச்சியையும், நடுநிலையாளர்களிடையே நல்லெண்ணத்தையும், எதிர்க்கட்சியினரிடையே மருட்சியையும், பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகத்தாரிடையே ஆக்கப்பூர்வமான ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது என்றால் அது மிகையல்ல. “நமக்கு நாமே “ என்ற பெயரே எல்லோருடைய இல்லங்களிலும் இரண் டறக் கலந்துவிட்ட சொல்லாகியிருக்கிறது. மொத்தத்தில் ஸ்டாலினின் இந்தப் பயணம் வெற்றிப் பயணம்; கழக வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய புதுமைப் பயணம்; இந்தப் பயணம் தம்பி ஸ்டாலினின் அரசியல் வாழ்க்கையில் மிக முக்கியமானதொரு மைல் கல்!”**


# இனமானப் பேராசிரியரின் வாழ்த்து!



“ஸ்டாலின் இளைஞரணி மூலம் மட்டுமே அறியப்பட்ட தலைவரல்ல. பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டவரும்கூட. இளமையில் தலைவர் எப்படி உழைத்தாரோ, அதேபோல் தளபதி ஸ்டாலின் அவர்களின் உள்ளத்திலும் தி.மு. கழகத்தின் கொள்கைகளால் தாக்கங்கள் ஏற்பட்டன. அன்று தி.மு.கழகத்தின் கொள்கைகளால் தாக்கங்கள் ஏற்பட்டன. அன்று தி.மு.க.வில் கொண்டாடப்படுகின்ற முக்கியமான விழாக்கள் பொங்கல் விழா, அண்ணா பிறந்த நாள் விழாக்கள் தான். எனவே, தளபதியும் அந்தக் காலத்திலே, தான் வாழ்கின்ற வட்டத்தில், கழகத்தின்பால் பற்று கொண்ட இளைஞர்களையும், நண்பர்களையும் ஒன்று திரட்டி கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. அமைப்பின் மூலம் அண்ணா பிறந்த நாள் விழாவினை 1966ஆம் ஆண்டு முதற்கொண்டு நடத்தி வந்தார்.

என்னுடைய மனதில் எதிர்கால வரலாற்றை கலைஞரைத் தொடர்ந்து தம்பி ஸ்டாலின்தான் வரைய இருக்கிறார் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஒருவேளை எழுத்திலே வரையாவிட்டாலும் தமிழ் மக்களுடைய மனதிலே வரையக்கூடிய ஆற்றல் தம்பி ஸ்டாலினுக்கு உண்டு.”

# வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள்!



ஒரு இனம் கடந்த கால வரலாற்றை முழுமையாக அறிந்திருக்க வேண்டும். அதனை ஆவணப்படுத்த வேண்டும்.

அதனை வரக்கூடிய வருங்காலத் தலைமுறைக்குச் சொல்லித் தரவேண்டும். எத்தகைய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் என்ற பெருமிதம் நமக்கு வேண்டும்.

பிசிப்பிணி போக்கும் மருத்துவர்களாம் வேளாண் பெருமக்களது கோரிக்கைகளுக்குச் செவிமடுக்கக்கூட மனமில்லாத வகையில் ஒன்றிய அரசு உள்ளது.

அதேநேரத்தில் உழவர் பெருமக்களது வாழ்வுக்கும் மேன்மைக்குமான அனைத்துத்திட்டங்களையும் தீட்டி வழங்கும் அரசாகத் தி.மு.க. அரசு உள்ளது.

மண்ணையும் காப்போம்! மக்களையும் காப்போம்! மண்ணையும் வளர்த்து, மக்களையும்வாழ்விப்போம்!

**-முதல்வர் மு.க.ஸ்டாலின்**

# “மந்திரச்சொல் கலைஞர்” என மனப்பாடம் செய்த மகன்!



தந்தைசெய்த அருந்தவத்தால்
 தாய்செய்த பெருந்தவத்தால்
விந்தைசெய்யப் பிறந்தவனோ!
 வினைவலிமை மிக்கவனோ!
கொந்தளிக்கும் கடல்அலையாய்
 குமுறிஎழும் எரிமலையாய்
செந்தமிழர் உரிமைகளைச்
 சிறைமீட்க வந்தவனோ!

**சிந்தும் மழைத்துளிபோல்**
 **சிறந்தவனோ! போர்யானைத்**
**தந்தம்போல் உயர்ந்தவனோ!**

எந்தமிழர் படைதிரட்டி
 எதிர்த்தொழித்த மன்னவனோ!

பந்தியிலே இலைதேடிப்
 பகையோடு கலந்தவர்கள்
சந்தியிலே நின்று,வசை
 சரமாரி பொழிந்தவர்கள்
தொந்திவளர்த் திட,நமக்குத்
 துரோகம்செய்தோர் அனைவரையும்
பிந்திவரும் " வரலாற்றுப்
 பிழைகள்"எனப் புறந்தள்ளி,

**உந்திஎழும் தடையனைத்தும்**
 **உடைப்பவனோ! இனப்பகைவர்**

விரட்டியநம் கலைஞர்வழி
பந்தயக் குதிரையைப்போல்
 பாய்ந்துவரும் காவலனோ!

**எந்தவிதத் தும்தமிழர்**
 **ஈடேற முடியாமல்**
**"நந்தி"எனக் குறுக்கிட்டு**
 **நலம்பயக்கும் பணிகளுக்கே**
**குந்தகம் விளைத்துவரும்**
 **குறுமதியர் சதிகளைத்தீப்**
**பந்தம்எனப் பொசுக்கவந்த**
 **பகலவனோ! விழியிரண்டும்**

எந்திரத்தின் விசைவெல்லும்
 "இனத்தலைவர் தளபதி"யை
"இந்து" வியக்கிறதே!
 ஏடுகள் சிலிர்க்கிறதே!
நொந்துப் பகைவர்மனம்
 நொறுங்கித் திகைக்கிறதே!

**சிந்தனையில் மாணவரைச்**
 **செதுக்குவதில், தமிழ்நிலத்தின்**
**மைந்தர்களை நாடுவதில்**
 **மகளிர்நலம் பேணுவதில்**
**இந்திய ஒன்றியத்தில்**

**தங்கம்போல் விளைந்தவனோ!**
**"பந்தம்"என அன்புக்கே**
 **பணிந்தவனோ! "திருப்புகழின்"**
**சந்தம்போல் அரிதாகத்**
 **தமிழர்க்கு வாய்த்தவனோ!**

சுந்தரப்பூந் தமிழ்காக்கத்
 தோன்றிவந்த தூதுவனோ!
சொந்தநலம் கருதாமல்
 சுற்றிவரும் ஆதவனோ!
சந்தனம்போல் உடல்தேய்ந்து
 சக்கரம்போல் சுழல்பவனோ!
முந்தைநறுந் தமிழ்வளர்த்த
 மூவேந்தர் குலமகனோ!

மந்தையிலே ஆடுகள்போல்
 மாடுகள்போல், தமிழர்தம்
சிந்தையிலே இருள்சூழ்ந்து
 சீர்குலைந்து, தேர்தல்எனும்
சந்தையிலே விலையாகிச்
 சாயாமல், எதிர்காலச்
சந்ததியை அவர்வாழ்வைச்
 சரிசெய்யத் துடிப்பவனோ!

குந்தும் குயிற்கூட்டைக்
 கோட்டான் சிதைத்ததுபோல்
மந்திஒன்று வண்ணமயில்
 மாடத்தை இடித்ததுபோல்
வந்தசிலர் தமிழ்நாட்டை
 வளைத்திருந்த கேவலத்தை

**தந்திரங்க ளைவென்று**
 **சாதனைகள் படைப்பவனோ!**
**கந்தல் துணிமாற்றிக்**
 **கட்டுதற்கும் வழியின்றி**
**வெந்துழலும் ஏழைமக்கள்**
 **விழிநீரைத் துடைப்பவனோ!**

சிந்துவெளி நாகரிகச்
 சிறப்புக்கும் மூத்தஇனம்
நந்தமிழர் எனநிறுவி
 நாளும்உரை செய்பவனோ!
சந்துவழி நுழைந்தேறித்
 தமிழ்மண்ணில் குடியேறி
"வந்தேறி" யானவர்தம்
 வாலறுக்க வல்லவனோ!

இந்திரர்பொய் புராணத்தை
 இதிகாசப் புனைவைமறுத்(து)
அந்தகர்க்கும் அறிவுக்கண்
 திறந்தவனோ! அர்ச்சகராய்
நந்தனுக்கும் உரிமைதந்த
 நாயகனோ! "கொரனாநோய்"த்
தொந்தரவில் மக்களுக்குத்
 துணையிருந்த தூயவனோ!

"துந்துபி முழக்கமடா!
 தோட்டாக்கள் சத்தம்"என
இந்தி வெறிப்படையின்
 ஏகாதி பத்தியத்தை
விந்தியத்துக் கப்பாலே

**கந்தகம்போல் கனன்றபடி**
 **களத்தினிலே நின்றாலும்**
**அந்திநிலாக் குளிர்முழுதும்**
 **அகத்தினிலே வைத்தவனோ!**
**செந்தா மரைபோலும்**
 **சிரிப்பவனோ! இன்றைக்கும்**
**முந்தாநாள் பிறந்ததுபோல்**
 **முகப்பொலிவு கொண்டவனோ!**

"பொந்திடையே வைத்தகனற்
 பொறியால்கா(டு) அழிந்ததென்றே"
சிந்திசைத்தார் பாரதியார்!
 தி.மு.க. தொண்டனும்ஓர்
வெந்தணற் பொறிஎன்றே
 மெய்ப்பித்து, மொழிப்பகைவர்
அந்தரங்கச் சூழ்ச்சிகளை
 அடியோடு தகர்ப்பவனோ!

**பைந்தமிழுக் குக்கேடு**
 **பரவாமல் காப்பவனோ!**
**" ஐந்துநிலப் பண்பாட்டை"**
 **அழைத்துவந்துச் சேர்ப்பவனோ!**
**நைந்துழலும் வறியவர்தம்**
 **நலிவனைத்தும் தீர்ப்பவனோ!**
**தொய்ந்துவிடா(து) இயக்கத்தின்**
 **தொண்டர்களை ஈர்ப்பவனோ!**

பந்தோ! சுழல்வேகப்
 பம்பரமோ! எனும்வண்ணம்

**இப்படியோர் தலைவனைநாம்**
**சந்தித்த தில்லைஎனச்**
 **சரித்திரம் மலைக்கிறதே!**

வெந்தயம்போல் அமைந்தகுணம்!
 வெங்களத்தில் வீரமனம்!
நந்தா விளக்குநிகர்
 நம்முதல்வர்! தவப்புதல்வர்!
நிந்தித்து வந்தவரும்

"நீ வாழ்க!" எனஇவரை
வந்தித்து வாழ்த்துகின்றார்!
 வாழியவே உயர்தலைவர்!

**"அந்தம்அவர்! ஆதிஅவர்!**
 **அம்மையப்பன் அவர்!எனக்கு**
**மந்திரச்சொல் கலைஞர்!"என**
 **மனப்பாடம் செய்தமகன்!**
**சந்திரனும் சூரியனும்**
 **சஞ்சரிக்கும் வரை.வானப்**
**பந்தலின்கீழ் புகழ்சூடிப்**
 **பல்லூழி வாழியவே!**



**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**

குறிப்பு:கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர், தளபதி அவர்களின் பிறந்தநாளை யொட்டி, ஒரே எதுகையில் 72 அடிகளில் அமைந்த கவிதை இது. அரசர்களைப் புகழ்ந்து போற்றிய சங்க இலக்கியக் கவிதைகள் முதல், கடவுளரை வணங்கிப் பாடிய சமய இலக்கியக் கவிதைகள் வரை, கூறியது கூறாமல், பயன்படுத்திய சொற்கள் ஒரே பொருளில் மீண்டும் வராமல், **ஒரே எதுகையில் இத்தனை அடிகள் கொண்ட நெடிய கவிதை தமிழில் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.**